செய்தி வெளியீட்டு எண்.22 நாள்: 6.1.2010

## முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உத்தரவிற்கிணங்க துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் சிக்குன் குனியா போன்ற காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிக்குன் குனியா, லெப்டோஸ்பைரோஸிஸ் மற்றும் டெங்கு காய்ச்சல் ஆகிய காய்ச்சல்களை கட்டுப்படுத்த தடுப்பு நடவடிக்கைகளை முடிக்கிவிடுமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சைகளை உடனடியாக மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பரவலாக காணப்படும் காய்ச்சல் பற்றியும், நோய்களுக்கு காரணமான கொசுக்களை ஒழிக்கும் பணியினை தீவிரப்படுத்துவது குறித்தும் சுகாதாரத்துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். தமிழகத்தில் 2006ஆம் ஆண்டில் சிக்குன் குனியா காய்ச்சலினால் 64 ஆயிரத்து 802 நபர்கள் பாதிக்கப்பட்டனர். தமிழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் சிக்குன் குனியாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2007ஆம் ஆண்டில் 47 ஆகவும், 2008ஆம் ஆண்டில் 71 ஆகவும் குறைந்துள்ளது.

தென்மாவட்டங்களில் குறிப்பாக விருதுநகர், மேளப்பாளையம் போன்ற பகுதிகளில் சிக்குன் குனியா காய்ச்சல் இருப்பதாகவும், வெளிநாடுகளுக்கு சென்று திரும்பவர்கள், இந்தக் காய்ச்சல் தொற்றோடு வந்ததாகவும், இதனால் இப்பகுதிகளில் இக்காய்ச்சல் பரவியிருப்பதாகவும், ஜப்பானிய மூளைச்காய்ச்சல் உள்ள திருவண்ணாமலை, தஞ்சாவூர் மாவட்டங்களில் தடுப்பூசி போடப்பட்டுவருவதால் இந்நோயின் தாக்கம் குறைந்திருப்பதாகவும் மருத்துவத்துறை அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இவ்வாய்வுக் கூட்டத்தில் அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதாவது:

“மலேரியா, டெங்கு, லெப்டோஸ்பைரோஸிஸ், ஸ்வைன்ப்ளூ, யானைக்கால் நோய் போன்ற நோய்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்; பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடுப்பூசி போடும் பணியினை தீவிரப்படுத்த வேண்டும்; அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளை இருப்பு வைத்திருக்க வேண்டும்; இந்நோய்களுக்கு காரணமான கொசுவை ஒழிப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்; இதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள

**3,850 மஸ்தூர்களின் நியமனத்தை மேலும் நீட்டித்து கொசுப்புகை மருந்து அடிக்கும் பணியினை தீவிரப்படுத்த வேண்டும்; மாவட்டத்தில் ஒரு ஒன்றியத்தை தேர்ந்தெடுத்து, அந்த ஒன்றியத்திலுள்ள கிராமங்களில் சுகாதாரத்துறை பணியாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், அரசு சாரா அமைப்புகள் ஆகியோரை ஒருங்கிணைத்து தீவிர கொசு ஒழிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்; இத்திட்டம் சிறப்பான பலனைத் தந்தால், இத்திட்டத்தை மற்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விரிவுப்படுத்தி செயல்படுத்த வேண்டும்; இத்திட்டத்தை உடனடியாக தொடங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; கொசுவினால் பரவக்கூடிய அனைத்து நோய்களையும் கட்டுப்படுத்தவும், ஒழிக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்" என்று அறிவுறுத்தினார்.**

**மேற்கண்ட ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு இராஜேஷ் லகானி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு செந்தில்குமார், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை, முதன்மைச் செயலாளர் மற்றும் இயக்குநர் திரு இராஜ்குமார், இ.ஆ.ப., பொது சுகாதாரத் துறை இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

*** * * * ***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**